ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ வேலிக்கோல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வேலிக்கோல் ॥

## கோல் கொண்டுவா என்னல்

‡வேலிக் கோல் வெட்டி⋆ விளையாடு வில் ஏற்றி⋆
    தாலிக் கொழுந்தைத்⋆ தடங்கழுத்தில் பூண்டு⋆
பீலித் தழையைப்⋆ பிணைத்துப் பிறகிட்டு⋆
    காலிப் பின் போவாற்கோர் கோல் கொண்டு வா!
கடல்நிற வண்ணற்கோர் கோல் கொண்டு வா (1)

கொங்கும் குடந்தையும்⋆ கோட்டியூரும் பேரும்⋆
    எங்கும் திரிந்து⋆ விளையாடும் என் மகன்⋆
சங்கம் பிடிக்கும்⋆ தடக்கைக்குத் தக்க⋆ நல்
    அங்கம் உடையதோர் கோல் கொண்டு வா!
அரக்கு வழித்ததோர் கோல் கொண்டு வா (2)

கறுத்திட்டெதிர் நின்ற⋆ கஞ்சனைக் கொன்றான்⋆
    பொறுத்திட்டெதிர் வந்த⋆ புள்ளின் வாய் கீண்டான்⋆
நெறித்த குழல்களை⋆ நீங்க முன் ஓடி⋆
    சிறுக்கன்று மேய்ப்பாற்கோர் கோல் கொண்டு வா!
தேவ பிரானுக்கோர் கோல் கொண்டு வா (3)

ஒன்றே உரைப்பான்⋆ ஒரு சொல்லே சொல்லுவான்⋆
    துன்று முடியான்⋆ துரியோதனன் பக்கல்⋆
சென்றங்குப் பாரதம்⋆ கையெறிந்தானுக்கு⋆
    கன்றுகள் மேய்ப்பதோர் கோல் கொண்டு வா⋆
கடல் நிற வண்ணற்கோர் கோல் கொண்டு வா (4)

சீர் ஒன்று தூதாய்த்⋆ துரியோதனன் பக்கல்⋆
    ஊர் ஒன்று வேண்டிப்⋆ பெறாத உரோடத்தால்⋆
பார் ஒன்றிப் பாரதம்⋆ கைசெய்து பார்த்தற்குத்⋆
    தேர் ஒன்றை ஊர்ந்தாற்கோர் கோல் கொண்டு வா
தேவ பிரானுக்கோர் கோல் கொண்டு வா (5)

ஆலத்திலையான்⋆ அரவின் அணை மேலான்⋆
    நீலக் கடலுள்⋆ நெடுங்காலம் கண்வளர்ந்தான்⋆
பாலப் பிராயத்தே⋆ பார்த்தர்க்கருள் செய்த⋆
    கோலப் பிரானுக்கோர் கோல் கொண்டு வா!
குடந்தைக் கிடந்தாற்கோர் கோல் கொண்டு வா (6)

பொன் திகழ்⋆ சித்திரகூடப் பொருப்பினில்⋆
    உற்ற வடிவில்⋆ ஒரு கண்ணும் கொண்ட⋆ அக்-
கற்றைக் குழலன்⋆ கடியன் விரைந்துன்னை⋆
    மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா!
மணிவண்ண நம்பிக்கோர் கோல் கொண்டு வா (7)

மின்னிடைச் சீதை பொருட்டா⋆ இலங்கையர்⋆
    மன்னன் மணிமுடி⋆ பத்தும் உடன் வீழத்⋆
தன் நிகர் ஒன்றில்லாச்⋆ சிலை கால் வளைத்திட்ட⋆
    மின்னு முடியற்கோர் கோல் கொண்டு வா!
வேலை அடைத்தாற்கோர் கோல் கொண்டு வா (8)

தென் இலங்கை மன்னன்⋆ சிரம் தோள் துணிசெய்து⋆
    மின் இலங்குபூண்⋆ விபீடண நம்பிக்கு⋆
என் இலங்கு நாமத்தளவும்⋆ அரசென்ற⋆
    மின் அல்ங்காரற்கோர் கோல் கொண்டு வா!
வேங்கட வாணர்க்கோர் கோல் கொண்டு வா (9)

‡அக்காக்காய் நம்பிக்குக்⋆ கோல் கொண்டு வா என்று⋆
    மிக்காள் உரைத்த சொல்⋆ வில்லிபுத்தூர்ப் பட்டன்⋆
ஒக்க உரைத்த⋆ தமிழ் பத்தும் வல்லவர்⋆
    மக்களைப் பெற்று⋆ மகிழ்வர் இவ்வையத்தே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥